இந்திய வரலாற்றுப் பேரவை மாநாட்டைத் தொடங்கிவைத்து

கலைஞர் உரை

பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18

டிசம்பர் 27, 1996

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நேற்று (வெள்ளிக் கிழமை) இந்திய வரலாற்றுப் பேரவையின் 57-வது மாநாட்டைத் தொடங்கிவைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை வருமாறு:-

இந்தியாவின் முன்னோடிப் பல்கலைக் கழகங்களில் ஒன்றாக விளங்குகிற சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்தியாவின் மிகப் பழமையான கல்வி அமைப்பான இந்திய வரலாற்றுப் பேரவையின் 57ஆவது மாநாட்டிற்கு வருகை தந்திருக்கிற பிரதிநிதிகளை எல்லாம் தமிழ்நாடு அரசின் சார்பாகவும், என் சார்பாகவும் நான் அன்புடன் வரவேற்கிறேன்.

புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்களின் பங்களிப்பு

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் துறையான இந்திய வரலாற்றுத் துறை 1914-இல் ஏற்படுத்தப்பட்டது. தமிழர்கள் பற்றியும், தென்னிந்திய வரலாறு பற்றியும் தங்களுடைய எழுத்தினாலும், ஆராய்ச்சிக் கருத்தினாலும் இத்துறையின் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்கள், அறிஞர்களின் பங்களிப்பு இந்திய வரலாற்றை முழுமையாக புரிந்து கொள்வதில் கோட்பாட்டளவில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் எஸ்.கிருஷ்ணசுவாமி ஐயங்காரின் "தமிழ் இலக்கியத்தின் பொற்காலம்" "தென்னிந்திய வரலாற்றின் தொடக்கம்" என்ற நூல்களும் பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்காரின் "தமிழர் வரலாறு" மற்றும் "ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு" என்ற நூல்களும் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியின் "பாண்டிய அரசு", "சோழர்கள்" என்ற நூல்களும் டாக்டர். கே.கே.பிள்ளையின் "தென்னிந்தியாவும், இலங்கையும்" மற்றும் "தமிழர்களின் சமூக வரலாறு" என்ற நூல்களும், முதன் முதலாக இத்துறையின் அறிஞர் பெருமக்கள் வழங்கிய நுண்மாண் நுழைபுலமுடைய படைப்புகளில் சிலவாகும். இவை, இந்திய வரலாறு குறித்து, அதாவது, பெரிதும் வட இந்திய நோக்கில் எழுதப்பட்ட வரலாறு குறித்து அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த கோட்பாட்டிற்குச் சவாலாக அமைந்தன. அறிஞர் பெருமக்களின் இத்தகைய படைப்புகளும், இவற்றைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளும், ஆரியர்களுக்கு முற்பட்ட இந்திய வரலாற்றைத் தெளிவாக நிலைநிறுத்தியுள்ளது.

பண்டைத் தமிழர் வாழ்க்கை முறையை அறிய பயன்படும் சான்றுகள்

பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்களுடைய "ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு" என்ற நூலில் தெரிவித்த கருத்து முடிவுகள் சிலவற்றை நான் இங்கு மேற்கோள்காட்ட விரும்புகிறேன்.

"இந்தியாவில் ஆரியர் நாகரிகம் தோன்றுவதற்கு முன்பிருந்த பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை முறையைத் தெளிவாக வகுத்துரைப்பதற்குப் பயன்படக்கூடிய மூன்று வகைப்பட்ட சான்றுகள் உள்ளன...

வரலாற்றுக்கு முற்பட்ட வேலைப்பாடுமிக்க பழங்கலைப் பொருட்கள், வரலாற்றில் எஞ்சிய சின்னங்கள், புதியகற்காலம் மற்றும் பழைய இரும்புக்காலத் தொடக்கப் பகுதியைச் சேர்ந்த கல்லறைகள் ஆகியவை பண்டைக் காலத் தென்னிந்தியர் வாழ்க்கை முறைபற்றி அறியக் கிடைக்கின்ற முதல் சான்றாகும்.

இரண்டாவது வகைச் சான்று, ஆரியர் வருகைக்கு முன்னர் தமிழர் பயன்படுத்திய பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் ஆகும். ஏனெனில் அவற்றைக் கொண்டு, தமிழர்கள் பயன்படுத்திய பொருட்கள் அல்லது அவர்கள் பின்பற்றிய வழக்கங்கள் மற்றும் அவர்கள் ஆற்றி முடித்த செயல்கள் ஆகியவற்றை நாம் ஊகித்தறிய துணை புரிகின்றன.

மூன்றாவது வகைச் சான்று, நமது பண்டைய இலக்கியங்கள் ஆகும். தற்போது நாம் அறியக் கிடைக்கின்ற பண்டைய இலக்கியங்களான சான்றுகள் யாவும் மேற் கூறிய இரு வகைச் சான்றுகளுக்கும் காலத்தால் பிற்பட்டவை என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக் கின்றவை என்பதாலும், அவையும்கூட தொன்று தொட்டுத் தொடர்ந்து வருகின்ற வாழ்க்கையின் இடையீடில்லாத தொடர்ச்சியே என்பதாலும், இலக்கியங்கள் வாயிலாகப் பெறும் சான்றுகளை, ஏனைய இரு வழியில் பெற்ற சான்றுகள் மூலம் நாம் எய்திய கருத்து முடிவுகளை உறுதி செய்து கொள்வதற்குப் பயன்படுத்த இயலும்."

இத்தகவல் ஆதாரங்களை வைத்து திரு.பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் தமிழர் பண்பாடு ஐந்தாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டது எனக் கருதுகிறார். எனவே இதனை "ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழர் பண்பாடு" என்றெடுத் துரைத்துள்ளார்.

தத்துவம் - வாழ்க்கை முறையில் தமிழர்களின் தனித்தன்மை

தமிழர்கள், தத்துவத்தையும் வாழ்க்கை முறையையும் பற்றிய அறிதலில் தனித்தன்மை வாய்ந்தவர்கள். எடுத்துக் காட்டாக, வடஇந்தியாவைச் சேர்ந்த பழங்கால அரசியல் சிந்தனையாளர்கள் "வனலதா" அல்லது "கல்ப விருக்ஷா" என்கிற கோட்பாட்டின் அடிப்படையில், மனித வாழ்க்கை முறையில் இயற்கையின் இயல்பிற்கு விளக்கமளிக்க முற் பட்டனர். பழங்காலத் தமிழர்கள், மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பூமிப் பகுதியைப் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று இயல்பாக ஐவகை நிலங் களாகப் பிரித்திட இயலும் என்று கண்டனர். இந்த வகைப்பாட்டின் மிக முக்கிய அம்சம், அவை வெறும் புவியியல் வகைப்பாடாக மட்டுமின்றி, மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகவும் இருக்கின்றன என்பதேயாகும். பாலை, மணல் பரந்து வறண்டு கிடக்கும் நிலப்பகுதி; இது மனிதர் நாடோடியாகத் திரிந்த நிலை. குறிஞ்சி, மலையும், மலைசார்ந்த நிலப் பகுதியும்; இது வேட்டையாடி உயிர் வாழ்ந்த நிலை. முல்லை, காடும் காடு சார்ந்த பகுதிகளும்; இது கால்நடைகளைப் பேணி வாழ்ந்த நிலை, மருதம், ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதி; இது வேளாண்மையை மேற்கொண்ட நிலை. நெய்தல், ஆறு கடலோடு கலக்கும் பகுதி; இது மனிதகுல வளர்ச்சியில் மீன்பிடித்தல், கலம் செலுத்தல் ஆகிய நிலை.

பிந்தைய நூற்றாண்டுகளில் தமிழர் சமுதாயம், சமூகப் பண்பாட்டு ஒழுக்கத்திற்கு வடநாட்டிலிருந்து வந்த மிகப் பெரிய முதல் அறை கூவலைஎதிர்கொள்ள வேண்டி யிருந்தது.

அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்த பொருத்தமான தமிழின் தனிச்சிறப்பு

அறிவியல் தாகம், உறுதியான (Concrete Ideas) கருத்துகள் தங்களுக்கே உரிய கற்பனைகள் ஆகியவற்றில் தமிழர்கள் பெருவிருப்பம் கொண்டிருந்தனர். இவற்றின் வெளிப்பாடே அக்காலத் தமிழர்களின் தனித்திறமாக இருந்தது என்று பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்த, தமிழ் தனிச்சிறப்புடன் பொருத்தமாக உள்ளது எனலாம். வடமொழியின் தனித்திறமாகத் தத்துவத் தாகமே பெரிதும் காணப்படுகிறது. வடமொழி நூல்கள், சிந்தனைசார் கருத்துகளைப் (Abstractions) பெரிதும் சித்தரிக்கின்றன. சிந்தனைசார் கருத்துக்கள் தத்துவத்தின் உயிர் மூச்சாக விளங்குபவை.

மேல்நாட்டுச் சிந்தனைகள் விடுத்துள்ள அறைகூவல்

4

அண்மையில், மேல்நாட்டுச் சிந்தனைகள் இந்திய சமூகத்தின் மீது தங்கள் செல்வாக்கைச் செலுத்தவும் மாற்றியமைக்கும் வகையில் அறைகூவல் விடுக்கவும் தொடங்கியுள்ளன. மேலை நாடுகள் நம் நாட்டை நோக்கி விடுத்துள்ள அறைகூவல்களாவன: அரசியல் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு, (நவீன) ஜனநாயக அறிவு, கட்டுக்கோப்பான அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அதிகார வர்க்கம், பொருளாதார அடிப்படையில், முறைப்படுத்தப்பட்ட வேளாண் சீர் திருத்தங்கள், தொழில் பொருளாதாரம், அமைப்பு ரீதியான தொழிலாளர்கள், போக்குவரத்துத் தகவல் தொடர்பு வளர்ச்சி. சமூக அடிப்படையில், சமத்துவச் சிந்தனைகள், குடிமையுரிமைகள், அனைவருக்கும் கல்வி கற்க சம வாய்ப்புகள். மத அடிப்படையில், இறைவனை தந்தையாகவும், மனிதர்கள் அனைவரையும் சகோதரர்களாகவும் பாவிக்கும் கிறித்துவத்தின் சிந்தனைகள், மனித நேயத்துடன் ஆற்றப்படும் சமயப்பணிகள்.

அரசியல் அடிப்படையில், எதேச்சதிகாரமும் பொருளாதார அடிப்படையில் நிலப்பிரபத்துவ முறையும், சமூக அடிப்படையில், சாதிப் பாகுபாடும், மத அடிப்படையில், வைதீகத் தாக்கமும் கொண்டிருந்த இந்திய சமூகம், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக மேலை நாடுகளின் இத்தகைய தனித்தன்மை வாய்ந்த அறைகூவல்களை எதிர்கொள்ளத் தொடங்கியது.

அனைத்து இந்தியாவிலும் முதன் முதலில் வங்கதேசம் தான் இம்மாறுதலை ஏற்றுக் கொண்டது என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். வங்காளத்தில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை இராஜாராம் மோகன் ராய், பிரம்ம சமாஜம் மூலம் தீவிரமாக செயற்படுத்த முனைந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட பெரும் மாற்றம்

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருப தாண்டுகளிலும், 20ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு களிலும் பெரும்பான்மையான இந்தியர்களின் உணர்வு களில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இதற்குப் பின்வரும் மூன்று புதிய கூறுகள் முக்கியமான காரணங்கள் ஆகும்.

1. மதமாற்றம் குறித்து அரசின் நடவடிக்கைகளில் ஐயப்பாடு.

2. சமூக சீர்திருத்தங்களை மேம்படுத்த பிரிட்டிஷ் அரசு காட்டிய பெருந்தயக்கமும் மிகுந்த எச்சரிக்கையும்.

3. ஆன்மீக உணர்வையும் தேசிய உணர்வையும் மறுதலிக் கும் நிலையிலிருந்து இந்தியாவை மீட்பதற்குச் சமய இயக்கங்கள் தோன்றின.

இச்சூழ்நிலைகள் பெரும்பாலான இந்து இளைஞர்கள், இந்து மதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் பாதுகாத்து, போற்றிப் பெருமைப்படுத்த வழிகோலின. அதன் விளை வாக, தொடக்க கால சமூகசீர்திருத்தவாதிகள் மேற் கொண்ட முயற்சிகள் பெருமளவில் பயனற்றுப் போயின.

தந்தை பெரியாரால் ஏற்பட்ட மாபெரும் மாற்றம்

ஆனால், இந்தியாவின் பொதுவான இப்போக்கிற்கு மாறாக, சென்னை மாகாணத்தில், குறிப்பாகத் தமிழ் பேசும் பகுதிகளில், 1910ஆம் ஆண்டு முதல் புதியதொரு சூழ்நிலை உருவாகத் தொடங்கியது. 1925ஆம் ஆண்டில், பெரியார் அவர்கள் (ஈ.வெ.ரா) இந்திய தேசிய காங்கிர சிலிருந்து பிரிந்து வந்தபோது, இந்தியாவில் சமூகசீர்திருத்த இயக்க வரலாற்றில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்திய சமூகத்தின் இரு பெரும் தீமைகளை, அதாவது சாதிப் பாகுபாடு, பெண்ணடிமை - ஆகிய இவ்விரண்டையும் ஒழிப்பதற்கு, புதிய அணுகுமுறையைக் கொண்டுவரும் நோக்குடன், அவர் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். இது, தனிமனிதரின் சுயமரியாதையைப் பார்க்கிற, அனைத்துப் பாரம்பரிய அமைப்புக்களுக்கும், சமூகப் பழக்கவழக்கங்களுக்கும் எதிரானதாகும். பொது வாகக் கூறினால், இதில் கற்றறிந்தோர் கூட்டம் மட்டு மின்றி, சென்னை மாகாணத்தில், சமூகப் பிரச்சனைகளில் ஆர்வம் கொண்ட பத்திரிகைகளும், அரசியலைத் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்திருந்த பத்திரிகைகளும் மாறு பட்ட கருத்தைக் கொண்டிருந்தன.

சங்கரன் நாயர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள், ஆங்கிலேயர் குறித்து நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்க மும் கொண்டிருந்த அணுகுமுறைக்குப் பெரிதும் ஆதர வாக உள்ளன என்பதைக் காணலாம்.

தமிழ்நாட்டின் வரலாற்று ஆய்வு ஒரு மாநிலம் பற்றிய ஆய்வு மட்டுமல்ல

புகழ்மிக்க வரலாற்று அறிஞர்களும் ஆய்வாளர்களும் நிறைந்துள்ள இம்மாமன்றத்தில், மேற்சொன்னவற்றின் அடிப்படையில் சில கருத்துகளை, முன்வைக்க விழை கிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்று ஆய்வு என்பது, ஒரு மாகாணம் பற்றிய அல்லது இந்தியாவின் ஒரு மாநிலம் பற்றிய ஆய்வு என்பதோடு மட்டுமல்லாமல், அது தென்னிந்திய வரலாற் றின் அடிப்படை ஆதாரமாகவும் திகழ்கிறது.

அவ்வாறு பார்க்கும்போது, இது முழுமையான இந்தியத் துணைக்கண்ட சமுதாயம் மற்றும் பண்பாட்டை உருவாக்க அடித்தளமாக அமைந்த இருபெரும் கூறுகளில் ஒன்றைப் பற்றிய ஆய்வாக அமைகிறது. 6

இரண்டாவதாக, தமிழர்களின் வரலாறு என்பது இந்திய வரலாற்றையும் கடந்த ஒன்றாகும். இதனை, பரந்துபட்ட பண்டைய தமிழ்ப் பண்பாட்டின் வரலாறு எனக் கொள்ள லாம். தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பெருநிலப் பகுதியில் பரவியுள்ள நம் தமிழ்ப் பண்பாடு, புகழார்ந்த பழம் பெருமையையும், பன்னாட்டிலும் பரவி வாழும் இனம் தமிழினம் எனும் நிலையான வரலாற்றுப் பெருமை யையும் கொண்டுள்ளது. மேலை நாட்டு அறிஞர்கள் "மகத்தான இந்தியா", என்று குறிப்பிட்டுள்ள போதிலும் இந்திய நாட்டு மக்கள் இந்நாட்டை விட்டுக் குடிபெயர்ந்து பிறநாடுகளில் குடியேறியுள்ள முறையை ஆராய்வோமாயின், உலகம் முழுவதும் சென்று புதிய பகுதிகளைத் தங்கள் சொந்த நாடாக ஆக்கிக் கொண்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களே என்பது நன்கு விளங்கும். முக்கியமாகத் தமிழ் இனம் பரவிய காரணத்தினால்தான், "மகத்தான இந்தியா" என்ற கருத்தே தோன்றியது.

எனவே, இந்தப் புதிய பரிமாணங்களில் தமிழர் வரலாறு குறித்த ஆய்வுப் பணிகளைப் பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டுமேயல்லாது, அதனை இந்தியாவின் ஒரு மாநிலத் தின் வரலாறு என்ற குறுகிய கண்ணோட்டத்துடன் மேற் கொள்ளலாகாது. அண்மைக் காலத்தில் பல அயல்நாட்டு வரலாற்றறிஞர்கள் தமிழர் அல்லாத இந்திய வரலாற்றறி ஞர்களைக் காட்டிலும் உயரிய அளவில் ஆய்வுப் பணி களை மேற்கொண்டு, தமிழர்கள் பற்றியும் தமிழ்ப் பண்பாடு பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பல்வகை நூல்களைப் படைத்துள்ளனர். இங்கு குழுமியுள்ள அறிஞர்களிடம் நான் முன்வைக்கும் வேண்டுகோள், நாட்டின் பிற பகுதி களைச் சேர்ந்த இந்திய வரலாற்றறிஞர்களும் எவ்வித பார பட்சமின்றி தமிழர்கள் பற்றிய ஆய்விற்குத் தங்கள் பங்களிப்

ஆசிரியர் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18 அறிவாலயம்

பினை ஆற்ற முன்வர வேண்டும் என்பதாகும். இந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் மொழிசார்ந்த குறுகிய நோக்கத்தையோ, இனவெறியையோ வளர்ப்பதல்ல என் நோக்கம்; மாறாக, சில கருத்துகளை ஆழமாக உள்ளத்தில் பதிய வைப்பதே என்னுடைய நோக்கமாகும்.

முதலாவதாக, தமிழர் சமுதாயம் என்பது, ஒரு மாநிலம் சார்ந்ததல்ல; அது உலகளாவியது.

இரண்டாவதாக, தமிழர்கள் புகழ்பெற்ற கடந்த காலத்தையும், அடிப்படையில் வேறுபட்ட தனித்தன்மை வாய்ந்த, செவ்விய சமூக - பண்பாட்டுப் பண்பு நலன்களையும் கொண்டுள்ளனர்.

மூன்றாவதாக, தமிழர்கள் இந்திய சமுதாயத்தின் அடிப்படை என்ற வகையில் இந்தியப் பண்பாட்டின் பரிணாம வளர்ச்சிக்குப் பல்வேறு வகையிலும் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் வரலாறு தொடர்பான இந்த உண்மைகளை இந்தியாவிலுள்ள எந்தவொரு வரலாற்றறிஞர்களும் பாரபட்சமின்றி அறிந்தேற்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்வது, இந்திய மக்களின் உண்மையான, முழுமையான, சிறந்த முறையிலான வரலாற்றை உருவாக்கும் பணியில் பேருதவியாயிருக்க வழிவகுக்கும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துடன், சென்னையில் நடைபெறுகின்ற இந்த வரலாற்று மாநாட்டைத் தொடங்கி வைக்க அழைத்த இந்திய வரலாற்றுப் பேரவையின் செயற்குழு மற்றும் தமிழ்நாட்டுக் குழுவின் உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்திய வரலாற்றுப் பேரவையின் 57வது மாநாட்டை நான் பெருமகிழ்ச்சியுடன் இப்போது தொடங்கி வைக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுப் பேரவையின் 57–வது மாநாட்டினை துவக்கி வைத்துப் பேருரையாற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள் – கடந்த ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற வரலாற்றுப் பேரவையின் தொகுப்பினை பேராசிரியர் வி.என்.தத்தா வெளியிட அதன் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்! சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் பி.கே.பொன்னுசாமி, பேராசிரியர்கள் எம்.நாகநாதன், பி.ஜெகதீசன், துர்காதாஸ் குப்தா, எஸ்.சேத்தார் மற்றும் பலர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சென்னை-13

INDIAN HISTORY CONGRESS

57th SESSION

27th DECEMBER, 1996
CHENNAI

Inaugural Address

By

Hon'ble Thiru Dr. KALAIGNAR M. KARUNANIDHI
Chief Minister of Tamilnadu

பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18

INAUGURAL ADDRESS

***

57th Session of The Indian History Congress,
University of Madras, 27th December, 1996.

* * *

Professor P.K. Ponnusamy, Vice-Chancellor, University of Madras, Professor H.K. Barpujari, President Indian History Congress, Professor V.N. Dutta, President-elect, Professor R.S. Sharma, Vice President, Professor Amales Tripathi, Distinguished Historians, Ladies and Gentlemen.

On behalf of the Government of Tamilnadu and on my behalf, I cordially welcome the delegates of the Indian History Congress - the oldest academic body of India, to the 57th session at University of Madras, in Chennai, one of the pioneering Universities of India.

The Department of Indian History was created in 1914 as the first academic faculty of the University of Madras. It is true that the magnificent role played by the eminent historians and the scholars of this department in their writing and research of the Tamils and of the South Indian History led to a remarkable change in the whole concept of the understanding of the History of India.

Dr. S. Krishnaswamy Aiyengar's, **Augustan age of Tamil Literature**, *and* **Beginning of South Indian History;**

P.T. Srinivasa Iyengar's **The History of the Tamils,** *and* **The Pre-Aryan Tamil Culture;**

Prof. K.A. Nilakanta Sastri's — **Pandiyan Kingdom** *and* **The Cholas;**

Dr. K K Pillai's — **South India and Ceylone,** *and* **Social History of the Tamils**

are some of the earliest intellectual provocations which have launched a challenge to the then accepted concept that the Indian History was nothing but the history of North Indian orientation. These scholarly works and the successive researches have definitely established the Pre-Aryan history of India.

13549

Here I quote some of the findings of P.T. Srinivasa Iyengar in his **Pre-Aryan Tamil Culture:**

954.11
KAR

"There are three lines of evidence which can be utilised for constructing a picture of the life of the Ancient Tamils.

The first source of information regarding ancient South Indian life is the catalogue of pre–historic antiquities of artefacts, the relics and the graveyards belonging to the Neolithic and early Iron ages.

The second line of evidence is the Pre-Aryan Tamil nouns and verbs, for they infer what objects they handle or had observed and what actions they were able to perform.

The third line of evidence is the early literature. The existing specimens of literature, no doubt belong to times later than the times of other two evidences. But, since the life of the people mirrored in their literature is an unbroken continuation of that of the earlier epoch and can be used

to confirm the conclusions reached by the other two lines of evidence".

By utilising these sources of information P.T. Srinivasa Iyengar proposes the culture of the Tamils to five thousand years ago - and calls it **'Pre-Aryan Tamil Culture'.**

The Tamils have some distinct characteristics in their understanding of the philosophy and the way of life. For example, the ancient political thinkers of the North tried to explain the **State of Nature** in the process of human life with the concepts of **Vanalatha or Kalpavriksha.** The ancient Tamils noted the surface of the habitable portions of the earth could be divided into five natural regions of **Palai, Kurinji, Mullai, Marudam** and **Neydal.** The most interesting aspect of this classification is that these are not only a mere geographical divisions but more to characterise the civilisational growth of the humanity. In **Palai,** the sandy desert land, grew the nomad stage; in **Kurinji** the mountainous country, the hunter stage; in **Mullai** the forest tracts, the Pastoral stage; in **Marudam,** the lower river valley, the agricultural stage and in **Neydal,** the littoral stage, the fishing and sailing stage of human development.

This Tamil society in the later centuries had to respond to the first great challenge of socio-cultural in character from the north.

The genius of Tamils according to P.T. Srinivasa Iyengar is marked by the scientific temperament, concrete ideas and images appealed to the Tamil people and hence Tamil is

peculiarly fitted to be the vehicles of scientific knowledge. The genius of Sanskrit is marked by the philosophical temperament; it revels in abstractions which are the life-breath of philosophy.

In the recent past the genius of the West have begun to influence/challenge the Indian Society.

'The challenges posed by the West are politically the concept of the Rule of Law, the knowledge of (Modern) Democracy and the organised Bureaucracy; economically the regularised Agrarian reforms, industrial economy and organised labour and development of transport and communications; socially the egalitarian ideas, civil rights and equal opportunity of education for all and religiously Christian ideologies of 'Fatherhood of God and Brotherhood of man' and the missionary activities coupled with humanism'.

'The Indian society which was politically despotic, economically feudal, socially casteist and religiously Brahminical began to respond these characteristic challenges of the west gradually from the dawn of the 19th century'.

It is to be admitted that, of all Indian regions, the earliest response was from Bengal. This ideological response of Bengal oriented Social Reform Movement was powerfully organised by Raja Ram Mohan Roy in the form of Brahmo Samaj.

But during the last two decades of 19th Century and the first decade of the 20th Century a great change had manifested in the spirit of the majority of Indians. This was mainly due to three developments.

1. The suspicion on the activities of the Government for proselytization.

2. The greater caution and extreme reluctance of the British Government to promote Social Reforms.

3. The emergence of Religious movements to revive India from the so called De–Spiritualisation and De-Nationalisation.

These circumstances led a majority of the Hindu youth to defend and glorify all that was Hindu. Hence the efforts of the early social reformers were largely nullified.

As a contrast to this general trend of India, a new atmosphere began to develop from the 1910's in the Madras Presidency particularly in the Tamil speaking area. A great breakthrough in the history of Social Reform Movement in India emerged when Periyar (E V Ramasamy) broke with the Indian National Congress in 1925. He launched the Self Respect Movement with a view to bringing about new approach in the eradication of the two great evils of Indian society - the Casteism and the degradation of women. It was against almost all the traditional institutions which stand against the self respect of a person. Generally speaking, not only the intelligentsia but even the Press in Madras Presidency was divided as those which are interested in social issues and other predominantly political in their objectives.

One can see this findings of Sankaran Nair, runs strongly in the approach of the Justice Party and the Self Respect Movement towards the British.

From the facts given above a few observations and suggestions, I wish to submit to this August body of renowned historians and young scholars.

The History of Tamil Nadu is not merely a study of a Province or a State of India. It forms the nucleus for the history of South India. As such it is the study of one of the two great basic units which formed the basis to make the comprehensive Indian Society and Culture.

Secondly, the history of the Tamils is more than that of the History of India. One can positively infer that it is the Pan-Tamil Culture. The spread of Tamil culture in South and South East Asia has a glorious past and permanent hi for the Tamils as an International Race. Though, Western Scholars have captioned it as 'Greater India', if one studies the emigration patterns from India it is largely the Tamils who went across the World and made the new lands as their native country. The 'Greater India' concept is evolved mainly because of the spread of the Tamil Race.

Hence one looks forward to more research works on the history of Tamils on these new dimensions rather than narrowing it to a history of a Province of India. In the recent years, a number of foreign historians have done a great deal of research and contributed a variety of knowledge to the understanding of the Tamils and the Tamil Culture than the Non-Tamil Indian Historians. My sincere appeal to the galaxy of scholars assembled here is that the Indian historians from other parts of the Country should also come forward to contribute to the study of the Tamils, of course, without prejudice.

By these observations my aim is not to promote any kind of linguistic parochialism or racial fanaticism. But only to drive home a few facts that;

Firstly, the Tamil society is not merely a Provincial one but an international factor.

Secondly, the Tamils have a glorious past and socio-cultural character basically different, unique and classical.

Thirdly, the Tamils as the basic Indian Society have contributed differently and significantly to the evolution of the Indian culture.

And these realities regarding the history of the Tamils, I submit, should be recognised honestly by any unprejudiced historian on India and that will go a long way to make true, comprehensive and better history of Indian people.

With this, I thank the members of the Executive Committee of the Indian History Congress and the Local Committee for inviting me to inaugurate this historic session at Chennai.

I declare the 57th session of the Indian History Congress open.

★★★

Fiftyseventh Indian History Congress

27-29, DECEMBER 1996

DEPARTMENT OF INDIAN HISTORY,
UNIVERSITY OF MADRAS, CHENNAI